ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 1803/4 - 2013 මාර්තු මස 25 වැනි සඳුදා - 2013.03.25
*1803/4 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 25 ஆந் திகதி திங்கட்கிழமை*
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

## உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

### நெடுந்தீவு பிரதேச சபையின் துணைத் தவிசாளர் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்

கேட்டு விலகல் காரணமாக, நெடுந்தீவு பிரதேச சபையில் துணைத் தவிசாளரின் பதவி, வெற்றிடமாகியுள்ளதாதலாலும்;

சுப்பிரமணியம் கோபாலசிங்கம் எனும் துணைத் தவிசாளர் அங்கம் வகிக்கின்ற ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி என்ற அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளர் முப்பது (30) நாட்கள் காலப்பகுதிக்குள் துணைத் தவிசாளராக தேர்ந்தெடுக்கப் பட்டவரென வெளிப்படுத்தப்பட வேண்டியவரும் அக்கட்சியைச் சேர்ந்தவருமான நெடுந்தீவு பிரதேச சபையின் உறுப்பினர் தொடர்பாக தீர்மானிக்குமாறு என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும் ;

மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளர் அவ்வெற்றிடத்தை நிரப்புவதற்காக திரு. செபஸ்தி பேதுறு அருளப்பு என்பவரை பெயர் குறித்து நியமிக்கும் தமது முடிவினை அறிவித்துள்ளாராதலாலும் ;

இப்போது நெடுந்தீவு பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலர் சிவசுப்பிரமணியம் அச்சுதன் ஆகிய நான், திரு. செபஸ்தி பேதுறு அருளப்பு என்பவர், நெடுந்தீவு பிரதேச சபையின் துணைத் தவிசாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

எஸ். அச்சுதன்,
தெரிவத்தாட்சி அலுவலர்,
நெடுந்தீவு பிரதேச சபை.

தேர்தல்கள் அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
*2013, மாச்சு 14.*

*4 - 307/1*

**நெடுந்தீவு பிரதேச சபையின் உறுப்பினரொருவரின் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்**

கேட்டு விலகல் காரணமாக நெடுந்தீவு பிரதேச சபையின் உறுப்பினரொருவரின் பதவி, வெற்றிடமாகியிருக்கின்றதாதலாலும் ;

சுப்பிரமணியம் கோபாலசிங்கம் எனும் உறுப்பினர் சேர்ந்திருந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செயலாளர், முப்பது (30) நாட்கள் காலப்பகுதிக்குள் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு வெளிப்படுத்தப்பட வேண்டிய அக்கட்சியைச் சேர்ந்தவரும், நெடுந்தீவு பிரதேச சபையின் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு தகுதியுடையவருமான ஆளொருவரைப் பெயர் குறிப்பதற்கு என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும் ;

மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளர் அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு தகுதியுள்ள ஆளொருவராக திரு. கஸ்பார் யேசுராசா என்பவரைப் பெயர்குறித்து நியமித்துள்ளார் ஆதலாலும் ;

இப்போது நெடுந்தீவு பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலர் சிவசுப்பிரமணியம் அச்சுதன் ஆகிய நான், திரு. கஸ்பார் யேசுராசா என்பவர் நெடுந்தீவு பிரதேச சபையின் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

எஸ். அச்சுதன்,
தெரிவத்தாட்சி அலுவலர்,
நெடுந்தீவு பிரதேச சபை.

தேர்தல்கள் அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
2013, மாச்சு 14.

4 - 307/2

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.